பக்கத்தில் இடம் பார்க்கப்பட்டு அதற்கான மிஷினரிகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டு வருகின்றன. கட்டிடங்கள் வேலை நடைபெற்று வருகின்றன. உற்பத்தி செய்யும் சூழ்நிலைக்கு இன்னும் வரவில்லை. அரசாங்கத்தின் சார்பாக சோழபுரத்தின் அருகில்வைக்கப்பட்டதான தொழிற்சாலைதக்கு அடிப்படை வேலைகள் நடைபெறுகின்றன. மிஷனரிகள் வரவேண்டும். வந்து சேர்ந்ததற்குப் பிறகு உற்பத்தி தொடங்கும். சர்க்கார் சிமிண்ட் தொழிற்சாலைகள் சிறிய அளவில் வைப்பதற்கு ஒன்பது இடங்களில் வைக்கலா மென்று கருதி, கயத்தார், அம்பாசமுத்திரம், சுண்ணாம்பூர் போன்ற இடங்களுக்கு தனியார் ஆரம்பிக்க முன் வந்து ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு என் ஆர். தியாகராஜன்: முன்பு தொழிலமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள் இங்கே பேபி (சிறு) சிமிண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க திட்டமிருப்பதாகக் கூறினார்கள். அப்படி எத்தனை ஆரம்பிக்கப்பட்டன? ஒரு நாளைக்கு அவை எவ்வளவு உற்பத்தி செய்கிறது? ஆரம்பிக்க மூலதனம் எவ்வளவு தேவைப்படும்?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஒன்பது இடங்களில் சிறிய தொழிற்சாலைகள் வைக்கலாமென்று உத்தேசித்து, கயத்தாரில் 4 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் அளவுக்கு அங்கே பொருள் கிடைக்குமென்று தெரிகிறது. அம்பாசமுத்திரத்தில் 5 முதல் 6 மிலியன் டன் கிடைக்கும். அதில் பாதி சிமிண்டுக்குப் பயன்படும். சுண்ணாம்பூரில் 1.4 மிலியன் டன் கிடைக்கலாம். அரியலூர்-ரெட்டிபாளையத்தில் 2.50 லட்சம் டன் கிடைக்கும். கையிலருாபாத்-அமினாபாத் பகுதியில் 17 மிலியன் டன் கிடைக்கும். சமால்பட்டியில் 7.5 லட்சம் டன் லைம்ஸ்டோன் கிடைக்கும். வாளையாரில் 3 மிலியன் டன் கிடைக்கும். சேத்துப்பட்டும் பாண்டிச்சேரி அருகில் 3.5 மிலியன் டன்னும் கிடைக்கும் அளவிற்கு இருக்கிறது. சிந்தாமணிப்பட்டி- குளித்தலைக்கு அருகில் 2.75 மிலியன் டன் கிடைக்கும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சமீபத்தில் சிமிண்ட் கிடைக்காத நிலையில் இருந்த அது இப்போது சர்க்காரின் கொள்கையினாலும், மற்றும் கட்டிட வேலைகள் அதிகமில்லாமல் செலவு குறைக்கப்பட்டதாலும், தொழிற்சாலைகளில் சிமிண்ட் அதிகமாகத் தேங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

Allotment of Motor-cars

*186 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Works be pleased to state :—

(*a*) the names of M.L.Cs., M.L.As., and M.Ps. from Madras, who were allotted motor-cars, from out of the State Government quota, from 2nd October 1964 to 30th September 1967 ; and

(*b*) the names of M.L.As., M.L.Cs. and M.Ps., from this State who were not allotted motor-cars ?

சட்டமன்ற, சட்டப்பேரவை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் வண்டிகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி வரை சட்டமன்ற, சட்டசபை, பாராளுமன்ற சென்னை உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கு யார் யாருக்கு மோட்டார் வண்டிகள் தமிழக அரசு பங்கீட்டிலிருந்து வழங்கப்பட்டன?

(இ) மனுச் செய்துகொண்ட எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி.க்களில் யாரியாருக்குக் கொடுக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பேரவைமுன் விவரப் பட்டியில்a ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏன். ஆர். தியாகராஜன் : இந்த அறிக்கையின்படி 56 பேர் களுக்கு கார் வழங்கப்பட்டிருக்கிறது. 41 பேர்களுக்கு வழங்கப்படவில்லை. வழங்கப்படாதவர்களில் நானும் ஒருவன். 56 பேர்களில் 19 பேர்களுக்கு எனக்குத் தெரிந்தவரையில் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தான் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எனக்குப் கார் கொடுக்கவேண்டுமென்று, உத்தரவு இடுமாறு கேட்ட சமயத்தில் எனக்குக் கொடுக்காமல் ப. உ. ஷண்முகம், அன்பழகன், ஆகியோருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி அவர் களுக்குக் கொடுத்தார்கள். ஏற்றுக்கொண்டேன். இப்போது, ஆளும் கட்சியாக வந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு நாங்கள் காட்டிய அந்தச் சலுகையை நீங்கள் காட்டுவீர்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இன்னும் அவர் கேட்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கேட்டால் கொடுக்கப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஓரவஞ்சனையில்லாமல் கார் வேண்டு மென்று கேட்கிற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு, யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலைப்படாமல் தரப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தரப்படும். ஆனால் அவர் அதை வாங்கிவிடவேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : அவரவர்களுடைய தொகுதியை உறுப்பினர் கள் சுற்றிப்பார்க்கவேண்டுமென்ற அடிப்படையில், அவர்களுக்குக் கார் வேண்டுமென்று தரப்படுகிறது. அதில் வசதி உள்ளவர்களும் இல்லாதவர் களும் இருக்கிறார்கள். அதையொட்டிச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதைப் போல் கடன் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிக் கொடுப்பது கடன் அல்ல. சர்க்காரின் கடன் அல்ல. அதாவது கடமை அல்ல.

Motor, Lorry and Scooter Accidents.

187 *Q*.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state :—

(*a*) the number of (1) motor, (2) lorry, and (3) scooter accidents which took place in the Madras State from 6th March 1967 to 1st June 1967 ;

(*b*) the number of fatal cases among them, category-wise ; and

(*c*) whether any compensation was paid to the families of the deceased ?

---

a Printed as Appendix on pages 418-420